பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 06 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. நாட்டின் சுகாதாரத்துறை கடந்த 12 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

3. போலியோ சொட்டு மருந்து முகாம் நாடு முழுவதும் இன்று நடைபெறுகிறது.

4. கோயில்களில் தரிசன கட்டணத்தை உயர்த்துவது உள்ளிட்ட மக்கள் விரோத செயல்களில் ஒருபோதும் தமிழக அரசு ஈடுபடாது என்று மாநில அமைச்சர் திரு. ரமேஷ் உறுதிபட தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்சிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

நாட்டின் சுகாதாரத்துறை கடந்த 12 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள் தின விழாவையொட்டி தனியார் ஊடக நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், குறைந்த செலவில்

அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகள் கிடைக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பிரதமரின் மக்கள் சுகாதாரத் திட்டம் உலக அளவில் மிகப்பெரிய மருத்துவ காப்பீட்டுத் திட்டமாக உள்ளது என்றும், இத்திட்டத்தின் மூலம் 62 கோடி மக்கள் பயனடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் ஒரு லட்சத்து 84 ஆயிரம் ஆயுஷ்மான் சுகாதார மையங்கள் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற தொற்று அல்லாத நோய்களின் பாதிப்புகளை உரிய நேரத்தில் உடல் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் மருத்துவ செலவுகளை குறைக்க முடியும் என்று திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா - பிரிட்டன் இடையேயான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தால் ஏற்படும் வாய்ப்புகளை இந்திய நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டுள்ளார்.

லண்டனில் நடைபெற்ற வர்த்தக மாநாட்டின் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், இரு நாடுகளின் வர்த்தகம் மற்றும்

முதலீடுகளுக்கு பெரிதும் உதவிகரமாக இந்த ஒப்பந்தம் அமையும் என்று கூறினார்.

நீண்டகால முதலீடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, புதுமைக் கண்டுபிடிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

போலியோ சொட்டு மருந்து முகாம் நாடு முழுவதும் இன்று நடைபெறுகிறது.

தமிழகத்தில் **5** வயதிற்குட்பட்ட **52** லட்சத்து **90** ஆயிரம் குழந்தைகளுக்கு, **43** ஆயிரத்திற்கும் மேற்பட்ட மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், ரயில் மற்றும் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இந்த முகாம் நடைபெறுகிறது.

<<<<>>>>

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் ஆய்வு செய்தார்.

சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

சென்னையின் பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் சாலையின் மையத் தடுப்புகள், பாலத்தின் அடிப்பகுதிகள், நீர்நிலைப் பகுதிகள், பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் அதிக எண்ணிக்கையிலான மரக் கன்றுகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டு வருவதாக மாநகராட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

மறைந்த திரைப்பட இயக்குநரும் நடிகருமான பாக்யராஜின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று நடைபெறுகிறது.

நுங்கம்பாக்கத்தில் உள்ள இல்லத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் ஒன்றரை மணிக்கு பெசன்ட் நகரில் உள்ள மின்மயானத்தில் அன்னாரது உடல் தகனம் செய்யப்பட உள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

கோயில்களில் தரிசன கட்டணத்தை உயர்த்துவது உள்ளிட்ட மக்கள் விரோத செயல்களில் ஒருபோதும் தமிழக அரசு ஈடுபடாது என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் உறுதிபட தெரிவித்துள்ளார்.

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயிலில், ஆனி மாத திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெறுவதை ஒட்டி அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேரோட்டத்தை ஒட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நெல்லையப்பர் கோவிலுக்கு புதிய யானை கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்தார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்துள்ளனர். 3 பேர் காயமடைந்துள்ளனர்.

சென்னையில் இருந்து ராமநாதபுரத்திற்கு சென்றுகொண்டிருந்த கார், ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் உள்ள விளம்பர கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்து காரணமாக சென்னை - திருச்சி ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஒருசில இடங்களில், இன்றும், நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், திருவள்ளூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 14 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 3 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள கிரிமியா பகுதிகளில் யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------

பாகிஸ்தானின் கராச்சியில் அந்நாட்டு ராணுவத்திற்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 4 ராணுவ வீரர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

-------------

பஹ்ரைன் நாட்டைக் குறிவைத்து ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------

ஜம்மு-கஷ்மீரில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது, இது ரிக்டர் அளவுகோலில் 6 புள்ளி 2ஆக பதிவாகியுள்ளது.

-------------

அருணாச்சலப்பிரதேச மாநிலத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அம்மாநில காவல்துறை

மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து, ஓய்வுபெற்ற துணைநிலை ஆளுநர் திரு பட்நாயக் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

-------------

ஹரியானா மாநிலத்தில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைக் கண்காணிப்பதற்காக, குப்பைகளை சேகரிக்கும் அனைத்து வாகனங்களிலும் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட வேண்டும் என்று அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

-------------

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் ஆலய வளாகத்தில், உலக நாட்டிய தின விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் பாரம்பரிய சிறுதானிய மரபு உணவுத் திருவிழா, முளைப்பாரி ஊர்வலம் மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளுடன் நேற்று தொடங்கியது.

-------------

தேனி மாவட்டத்தில் உள்ள சிப்காட் உணவுப் பூங்காவை நேற்று ஆய்வு செய்த ஆட்சியர் திரு வைத்தியநாதன், முதலீட்டாளர்களுகுத்

தேவையான வசதிகள் கிடைப்பதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

-------------

சென்னை விமான நிலைய வருவாய்ப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, சீனாவில் இருந்து பட்டாசுகளை கடத்தும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்சிறது.

**Lords-**ல் இப்போட்டி இந்திய நேரப்படி இரவு 7 மணிக்குத் தொடங்குகிறது.

-----------

இந்தியா - அயர்லாந்து அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Belfest-ல்,** இப்போட்டி இந்திய நேரப்படி மாலை **6** மணிக்கு தொடங்குகிறது.

------------

**Targu Mureș** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சுமித் நாகல் பட்டம் வென்றார்.

**Romania-**வில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர், **6-3, 7-5,** என்ற செட் கணக்கில் பிரான்சின் **Felix Balshaw-**வை வென்றார்.

-----------

உலகக்கோப்பை படகுப் போட்டியில், இந்தியாவின் **Lakshay - Ujjwal Kumar Singh** இணை தங்கப் பதக்கம் வென்றது.

சுவிட்சர்லாந்தின் **Lucerne** நகரில் நடைபெற்ற உலக ரோயிங் கோப்பை படகுப் போட்டியின், ஆடவர் லைட்வெயிட் டபுள் ஸ்கல்ஸ் பிரிவில், முதல்முறையாக இப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளது.

**<<<<The End>>>>**